தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின்  ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

06.09.2025

வளர்தமிழ் நூல்களைப் பயன்படுத்துகின்ற அனைத்துப் பள்ளிநிர்வாகிகள் தலைமை ஆசிரியர்களுக்கு வணக்கம்,

அன்புடையீர்,

நீங்கள் 21 ஆண்டு காலமாக  தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை (TEDC-UK) யுடன் இணைந்து செயற்பட்டு  வளர்தமிழ் நூல்களைத் தொடர்ந்து பயன்படுத்தி வருவதற்கு எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இரண்டு தசாப்த காலமாக பயணிக்கின்ற எம் கட்டமைப்பில்  இதுவரை காலமும் எத்தனையோ ஆயிரம் மாணவர்கள் பயணித்திருக்கின்றார்கள்.  700க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன்  பணி புரிகின்றார்கள். எத்தனையோ நிர்வாகிகளின் அர்ப்பணிப்பான பணியும் பெற்றோர்கள் தன்னார்வலர்கள் நலன் விரும்பிகள் எனப் பலரின் பங்களிப்புமே  எம் தேசத்தோடு இணைந்த இக் கட்டமைப்பை  இன்றுவரை காப்பற்றி வருகின்றது என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இக் கட்டமைப்பிற்கு எத்தனையோ இடர்கள் வந்த போதும்  எல்லோரும் இணைந்து ஒன்றாக நின்று பல சவால்களை எதிர்கொண்டு கட்டமைப்பைக் காத்து வந்துள்ளோம். எங்கள் பயணம் எங்கள் இனத்தை எந்தப் புயலாலோ  சுனாமியாலோ  குலைக்க முடியாது என்பதை தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை நிரூபித்துள்ளது. நிரூபித்துக் கொண்டும் இருக்கின்றது.

ஐக்கிய இராச்சியத்தில் 20-க்கும் மேற்பட்ட தமிழ்க்கல்வி அமைப்புகள் இயங்கி வருகின்றன என்பதை நாங்கள் அறிவோம். ஒவ்வொன்றும் தனித்தனியான நோக்கங்களுடன் செயல்படுகின்றன.



தமிழே எங்கள் உயிர்

Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

ஆனால் TEDC-UK 2004-ஆம் ஆண்டு எங்கள் தாயகத்தால் தொடங்கப்பட்ட ஒரே ஒரு கல்விக் கட்டமைப்பு என்பதிலும் அது இன்றுவரை அதன் நோக்கத்திலிருந்து சற்றும் விலகாமல் நின்று நிலைத்திருக்கிறது என்று கூறுவதிலும் நாம் அனைவரும் இணைந்து பெருமைப்படுவோம். உங்களின் ஆதரவால் இன்று ஐக்கிய இராச்சியத்தில் மிகப்பெரிய தமிழ்க்கல்வி அமைப்பாக வளர்ந்திருப்பதுவும் TEDC-UK தான். இது நம் எல்லோருக்கும் பெருமை அளிக்கும் சாதனை. அதற்கு அனைவரினதும் தொடர்ந்த நம்பிக்கையும் உறுதித் தன்மையும் அர்ப்பணிப்பும் தான் காரணமாகின்றன.

அண்மையில் 03.08.2025 அன்று எங்கள் முன்னாள் இயக்குநர்களில் ஒருவரான திரு. ராதாகிரிதரன் விஜயசிங்கம் தலைமையில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டதாகவும், அப்போது **தமிழர் கலை கல்விப் பேரவை** (“**TAEC**” - Thamils Arts and Education council) என்ற புதிய அமைப்பு தொடங்கப்பட்டதாகவும், சில முன்னாள் நிர்வாக உறுப்பினர்களும் மூத்த உறுப்பினர்களும் அதில் இணைந்திருப்பதாகவும் எங்களுக்கு தெரியவந்தது.

இது TEDC-UK இல் இருந்து பிரிந்து புதிய அமைப்பு, புதிய நூல்கள் என வேறு பாதையில் பயணிப்பதை அவதானிக்கமுடிகின்றது. ஒவ்வொருவருக்கும் தங்கள் சொந்த பாதையைத் தேர்ந்தெடுக்கத் தனிச் சுதந்திரம் உண்டு என்பதை நாம் மதிக்கிறோம். அவர்களின் இந்தப் புதிய பயணத்திற்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதே நேரம் TEDC-UK இதுவரைகாலமும் தளராத துணிவோடு எப்படிப் பயணித்ததோ அதே பாதையிலே தொடர்ந்ததும் பயணிக்கும். உங்களுடன் உறுதுணையாக பயணிக்கவும், எங்கள் பள்ளிகளுக்கும் மாணவர்களுக்கும் சேவை செய்யவும் எதிலும் எங்களின் சிறந்த கல்வியூட்டல்களை வழங்கவும் உங்களின் தொடர்ந்த ஆதரவுடன் நாம் ஒரு குடையின் கீழ் எம் பணிகளை முன்னெடுத்து நீங்கள் எப்போதும் எதிர்பார்த்த மதிப்புகள் மற்றும் தரநிலைகளின் அடிப்படையில் செயல்படுவோம்.

மேலதிக விபரம் அடுத்த பக்கத்தில்....

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின்  ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk




*Source: Zoom meeting, 03.08.2025*

நன்றி,
நிர்வாகம்
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை.
06.09.2025

.......................................................................................................................................................

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஐக்கிய இராச்சியக் கிளையின் உத்தியோக தொடர்பு விவரங்கள்:

- மின்னஞ்சல் : admin@tedc.org.uk
- தொலைபேசி எண்கள்: 020 8432 6999 / 077 7175 3525 / 078 2649 3093 / 075 5486 2602

TEDC UK தகவல்தொடர்புகளின் நம்பகத்தன்மையை சரிபார்க்க, கீழே உள்ள இணைப்பைப் பயன்படுத்தி அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும்.
https://tedc.org.uk/newsletters/



Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012